நகர்மன்றம்
உதகமண்டலம்
12 –07-2019.

அன்புடையீர்,

வணக்கம். இந்நகர்மன்ற ஜீலை –2019–ம் மாத அவசரக்கூட்டம் வருகிற 12 –07 –2019 அன்று காலை 11.00 மணியளவில் தனி அலுவலர், அவர்களின் தலைமையில் கூட்டம் நடைபெறுவதால், மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இத்துடன் கூட்டப் பொருள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

**தனி அலுவலர்,**
**உதகமண்டலம் நகராட்சி.**

**1.** இந்நகராட்சியில் மூன்றாண்டுகளுக்கான குத்தகை கீழ்கண்ட இனங்கள் **31.03.2019** தேதியுடன் குத்தகை காலம் முடிவடைந்ததால் **19.02.2019, 27.02.2019, 07.03.2019** ஆகிய தேதிகளில் பொது ஏலம் விடப்பட்டது. மேற்படி பொது ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளாத காரணத்தால் பாராளு மன்ற தேர்தல் விதிமுறைகள் அமலுக்கு வந்ததால் மூன்று மாதங்களுக்கு பழைய குத்தகைதாரருக்கே குத்தகையினை நீட்டிப்பு செய்து **30.06.2019** வரை உத்தரவு வழங்கப்பட்டது. தேர்தல் நடத்தை விதிமுறைகள் விலக்கு முடிவுற்ற நிலையில் **20.06.2019, 28.06.2019** மற்றும் **12.07.2019** ஆகிய தேதிகளில் மீண்டும் கீழ்கண்ட இனங்களுக்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது.

குத்தகை ஏலம் சம்பந்தமாக விரிவாக விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | குத்தகை விவரம் | ஏல வைப்புத் தொகை | சொத்து மதிப்பு சான்று | சொத்து மதிப்பு உத்திரவாத சான்றிதழ் கொண்டு வராதவர்கள் காலம் 3ல் உள்ள தொகையுடன் கூடுதலாக செலுத்த வேண்டிய தொகை | கடந்த ஆண்டு (2018–19 ஆண்டு) குத்தகை தொகை | கடந்த 3 ஆண்டுகளின் சராசரி குத்தகை தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1. | கார்டன் அருகில் உள்ள கட்டண கழிப்பிடம் | ரூ.1,50,000/– | ரூ.3,00,000/– | ரூ.35,000/– | ரூ.336764/– | ரூ.320945/– |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2. | மார்க்கெட் தினசரி நுழைவு வாயில் அருகில் உள்ள கட்டண கழிப்பிடம் | ரூ.1,50,000/– | ரூ.3,00,000/– | ரூ.35,000/– | ரூ.341775/– | ரூ.325758/– |
| 3. | அப்பர் பஜார் மார்க்கெட் சாலையில் உள்ள கட்டண கழிப்பிடம் (நம்ம டாய்லெட்) | ரூ.25,000/– | ரூ.25,000/– | ரூ.10,000/– | ரூ.71883/– | ரூ.68514/– |
| 4. | உழவர் சந்தை அருகில் உள்ள கட்டண கழிப்பிடம் | ரூ.25,000/– | ரூ.25,000/– | ரூ.10,000/– | ரூ.63670/– | ரூ.58807/– |
| 5. | சிலேட்டர் ஹவுஸ் ஆடு, மாடு வதை சாலை | ரூ.1,00,000/– | ரூ.2,50,000/– | ரூ.25,000/– | ரூ.304290/– | ரூ.290030/– |

மேற்கண்ட குத்தகை இனங்கள் அனைத்தும் இதுவரை மொத்தம் பத்தி (1)ல் கூறிய தேதிகளில் ஆறு முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளி கோரியும், இக்குத்தகை இனங்கள் பொது ஏலத்தில் ஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளி கோர யாரும் முன் வரவில்லை. இது தொடர்பாக வருவாய் ஆய்வர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் ஆகியோர் மூலம் நேராய்வு செய்ததில் வருவாய் ஆய்வர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் ஆகியோரின் குறிப்பில் மேற்படி குத்தகை இனங்கள் கீழ்குறிப்பிட்ட காரணங்களால் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. நகரின் பேருந்து நிலைய வளாகம், படகு இல்ல வளாகம், ரோஸ் பூங்கா வளாகம், தாவரவியல் பூங்கா வளாகம் ஆகியவற்றின் பல்வேறு இடங்களில் அரசு கழிப்பிடங்கள் பொதுமக்கள் உபயோகத்திற்கு உள்ளதால் மேற்படி கழிப்பிடங்களில் பயணாளர்கள் அதிகம் வருவதில்லை. மேலும் குத்தகை இனங்களில் ஏல முன் வைப்புத் தொகை அதிகமாக உள்ளதாகவும் முன்னாள் குத்தகைதாரர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.
2. ஆடு, மாடு மற்றும் பன்றி ஆகியவை வதை செய்யும் இடத்தில் இவ்வினங்களுக்கு ஆடு, மாடுகள் வரத்து குறைவாக உள்ளதால் முந்தைய காலங்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் அரசு மதிப்பின் அடிப்படையில் ஏலம் கோர யாரும் முன் வரவில்லை என தெரிவித்தனர். மேலும் ஏல மற்றும் ஒப்பந்தப் புள்ளி முன் வைப்புத் தொகை அதிகமாக உள்ளதால் ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளி கோர முன் வரவில்லை என தெரிய வருகிறது.

எனவே 6 முறை ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளிகள் கோரியும் ஏலம் போகாத, மேற்படி குத்தகை இனங்களை ஏலத் தொகை மற்றும் முன் வைப்புத் தொகையை கீழ்கண்டவாறு குறைத்து நிர்ணயம் செய்து மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளிக் கோர தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது

| வ. எண் | குத்தகை விவரம் | ஏல வைப்புத் தொகை | சொத்து மதிப்பு சான்று | சொத்து மதிப்பு உத்திரவாத சான்றிதழ் கொண்டு வராதவர்கள் காலம் 3ல் உள்ள தொகையுடன் கூடுதலாக செலுத்த வேண்டிய தொகை |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | கார்டன் அருகில் உள்ள கட்டண கழிப்பிடம் | ரூ.1,00,000/– | ரூ.2,00,000/– | ரூ.25,000/– |
| 2. | மார்க்கெட் தினசரி நுழைவு வாயில் அருகில் உள்ள கட்டண கழிப்பிடம் | ரூ.1,00,000/– | ரூ.2,00,000/– | ரூ.25,000/– |
| 3. | அப்பர் பஜார் மார்க்கெட் சாலையில் உள்ள கட்டண கழிப்பிடம் (நம்ம டாய்லெட்) | ரூ.25,000/– | ரூ.25,000/– | ரூ.10,000/– |
| 4. | உழவர் சந்தை அருகில் உள்ள கட்டண கழிப்பிடம் | ரூ.25,000/– | ரூ.25,000/– | ரூ.10,000/– |
| 5. | சிலேட்டர் ஹவுஸ் ஆடு, மாடு வதை கூடம் | ரூ.75,000/– | ரூ.2,00,000/– | ரூ.25,000/– |

<u>அலுவலக குறிப்பு :–</u>

மேற்காணும் குத்தகை இனமான கட்டண கழிப்பிடங்கள் மற்றும் ஆடு, மாடு வதை (ஸ்லாட்டர் ஹவுஸ்) இனத்திற்கும் கடந்த மூன்றாண்டு சராசரி குத்தகை தொகையினை கணக்கிட்டு அதற்கு அதிகமாக அரசாங்க மதிப்பு நிர்ணயம் செய்து மேற்கண்ட கலம் 6ல் காணும் தொகைக்கு ஆறு முறைக்கு மேல் ஏலம் விடப்பட்டது. ஆனால் ஏலம் கோரயாரும் முன்வரவில்லை. பாராளுமன்ற தேர்தல் விதிகள் அமலுக்கு வந்ததால் மன்ற ஒப்புதலின் பேரில் மூன்று மாதங்களுக்கு மட்டும் பழைய குத்தகைதாரர்களுக்கு நீட்டிப்பு செய்து 30.06.2019 வரை உத்தரவு வழங்கப்பட்டது.

இவ்வினத்தில் 01.07.2019க்கு பிறகு துறை ரீதியாக வசூல் செய்ய ஆலோசிக்கப்பட்டது. ஆலோசனையில் இக்குத்தகை இனங்களுக்கு கடைநிலை ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் ஒரு குத்தகை இனத்திற்கு வழங்கப்படும்போது மாதம் ஒன்றுக்கு ஒரு நபருக்கு ரூ.22,000/– ஊதியம் மற்றும் டிக்கெட் புத்தகங்கள் அச்சடிக்கும் செலவு உட்பட ஆண்டு ஒன்றுக்கு ரூ.2,75,000/– நிர்வாக செலவினம் ஏற்படும் என்பதால் இவ்வினத்தில் துறை ரீதியாக குத்தகை வசூலிக்கும் பட்சத்தில் குத்தகை இனத்தில் இழப்பு ஏற்படும் என்பதனை கருத்தில் கொண்டு இவ்வினத்திற்கு மூன்று ஆண்டு ஏல சராசரியை விட ஏலத்தொகை குறைவாக நிர்ணயம் செய்யவும் மற்றும் ஏல முன்வைப்புத் தொகையினை மேற்கண்டவாறு மாற்றியமைத்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளிக் கோர தனி அலுவலர் அனுமதி அளிக்கலாம்.

**(ந.க.எண்.911/19/அ7)**

**தீர்மானம் எண்: 1470 அனுமதி வழங்கப்பட்டது.**

நகர்மன்றம்
உதகமண்டலம்
31 –07-2019.

அன்புடையீர்,

வணக்கம். இந்நகர்மன்ற ஜீலை –2019–ம் மாத சாதாரண கூட்டம் வருகிற 31 –07 –2019 அன்று காலை 11.00 மணியளவில் தனி அலுவலர், அவர்களின் தலைமையில் கூட்டம் நடைபெறுவதால், மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இத்துடன் கூட்டப் பொருள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

**தனி அலுவலர்,**
**உதகமண்டலம் நகராட்சி.**

**1.** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களது 28.06.2019ம் தேதிய செயல்முறை உத்தரவுப்படி உதகமண்டலம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் பணியாற்றும் 70 துப்புரவு பணியாளர்களை காஞ்சிபுரம் நகராட்சி அருள்மிகு தேவராஜ சுவாமிகள் திருக்கோயிலில் அத்திவரதர் சுவாமி வைபவத் திருவிழாவில் துப்புரவு பணி மேற்கொள்ள 01.08.2019 முதல் 10.08.2019 வரை 10 நாட்கள் அனுப்பி வைக்க 70 பேர்கள் காஞ்சிபுரம் சென்று வரை வாகன செலவு தலா 1500/– வீதம் ரூ.1,05,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து ஐந்தாயிரம்) சென்று வரும் நாட்களில் தேநீர் மற்றும் உணவு செலவு ரூ.45,000/– உட்பட மொத்தம் 1,50,000/– செலவு தொகை தேவைப்படுவதால் மேற்கண்ட தொகை பொது நிதியில் வழங்க மன்ற அனுமதி கோரலாம்.

**அலுவலக குறிப்பு :–**

**மேற்கண்ட செலவு தொகை ரூ.1,50,000/–க்கு மன்றம் அனுமதிக்கலாம்.**
**(ந.க.எண்.5234/2019/எச்1)**

**தீர்மானம் எண்: 1471 அனுமதி வழங்கப்பட்டது.**

**2.** இந்நகராட்சிக்கு உட்பட்ட மிஷ்னரி ஹில் பகுதிக்கு தண்ணீர் தள்ளும் RTO ஆபிஸ் அருகில் உள்ள 15 HP மோட்டார், குளிச்சோலைப் பகுதிக்கு தண்ணீர் தள்ளும் 20 HP மோட்டார், மற்றும் HPF பகுதிக்கு தண்ணீர் இறைக்கும் 10 HP மோட்டார் ஆகிய மூன்று மோட்டார்கள் பழுதடைந்து உள்ளது. எனவே, மேற்கண்ட பகுதிகளுக்கு தண்ணீர் வழங்க முடியாமல் மிகவும் காலதாமதம் ஆகிறது. இதனால் மேற்கண்ட பகுதிகளில் உள்ள பொது மக்களுக்கு தண்ணீர் வழங்கப்படும் நாட்கள் அதிகமாகிறது. இதனால் மக்களுக்கு தண்ணீர் இல்லாமல் மிகவும் சிரம்மப்படுகின்றனர். எனவே மேற்கண்ட மூன்று இடங்களில் உள்ள மோட்டார்களை பழுது நீக்கி சரி செய்து மீண்டும் அதே இடத்தில் பொருத்த தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.20/– இலட்சத்திற்கு பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :– மேற்கண்ட பணிக்கான தொகை குடிநீர் நிதியில் செலவிடலாம்.**

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**
**(ந.க.எண். இ5/5867/2019)**

**தீர்மானம் எண்: 1472 அனுமதி வழங்கப்பட்டது.**

**3.** உதகை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**03**–ல் சிறப்பு நிலை மேம்பாட்டு திட்டம் மூலம் கிணறு மற்றும் பம்ப் அறை கட்டப்பட்டுள்ளது. இதன் அருகில் தடுப்புச்சுவர் இல்லாமையால் மண் சரிவு ஏற்பட்டு பொது மக்கள் கிணறு மற்றும் தண்ணீர் பயன் படுத்த இயலாத நிலை உள்ளது.

எனவே இக்கட்டிடம் அருகில் தடுப்புச்சுவர் மற்றும் கிணற்று நீரினை அருகில் உள்ள 2 Braneh Main – ல் இணைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பிடு தொகை ரூ.**2.00** இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது. மேலும், இதனை குடிநீர் மற்றும் பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். இ5/6075/2019)**

**தீர்மானம் எண்: 1473 அனுமதி வழங்கப்பட்டது.**

**4.** உதகை நகராட்சியின் வார்டு எண்.**06**–ல் உள்ள சமுதாய கூடத்தில் தற்சமயம் அதிக அளவில் பொது மக்கள் விழாக்கள் நடைபெற்று வருகின்றது.

இதனால், இக்கட்டிடத்தில் கூடுதலாக சமயல் கூடம், தண்ணீர் வசதி, மற்றும் கை கழவுமிடம் பொது மக்களின் கோரிக்கையின் படி அமைக்க மதிப்பீடு தொகை ரூ.**3,00,000/–**க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இதனை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், அனுமதி கோரப்படுகின்றது.

**குறிப்பு :– மேற்கண்ட பணிக்கான தொகையை வருவாய் மூலதன நிதியில் செலவிடலாம்.**

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். இ5/6076/2019)**

**தீர்மானம் எண்: 1474 அனுமதி வழங்கப்பட்டது.**

**5.** உதகை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**3,4,5** மற்றும் **6** உள்ள குப்பை தொட்டிகள் சாலையின் ஓரங்களில் வைக்கப்படுகின்றது. இவ்விடம் போதிய வசதிகள் இன்றி, தரை முழவதும் எலிகள் மண்ணை தோண்டி, மழையின் காரணமாக சேறும் சகதியுமாக உள்ளது. எனவே, பொதுமக்கள் குப்பை தொட்டிகளை பயன்படுத்தவும், இயலாமலும், இரும்பு குப்பை தொட்டியின் அடிப்பகுதி துருப்பிடித்து பழதடைந்துள்ளது. இதனால் லாரிகளில் ஏற்றி செல்லும் வழியில் முழுவதும் சிதறிவிடும் நிலை உள்ளது. இதனை தடுக்கும் விதத்தில் சாலையின் குப்பை தொட்டிகள் வைக்கும் இடங்களில் சிமெண்ட் தளம் மற்றும் மழைநீர் புகாமல் தனியான அமைப்புகள் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.**1,60,000/–** அனுமதியும் இத்தொகையினை பொது நிதியில் செலவிடலாம் என்ற அனுமதி கோரப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். இ5/6077/2019)**

**தீர்மானம் எண்: 1475 அனுமதி வழங்கப்பட்டது.**

**6.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.30ல் உள்ள பிச்சைக் கனி ராவுத்தர் தெருவில் உள்ள நடைபாதை மழையினால் அரிக்கப்பட்டு மிகவும் பழுதடைந்தும் உள்ளது. மேலும் மழையினால் மண்திட்டு சரிந்து நடைபாதை சேதமடைந்து இடிந்து உள்ளது. இதனால் பொது மக்கள் இந்த நடைபாதையை பயன்படுத்தும் போது மிகவும் சிரம்மமாக நடந்து செல்கின்றனர். மேலும் மழையினால் நடைபாதை முற்றிலும் துண்டிக்கப்படுவதற்கு முன்பு இந்த நடைபாதையையும், அதனை ஒட்டியுள்ள தடுப்புச் சுவரையும் அமைப்பது மிகவும் அவசியம் ஆகும். இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.80/– இலட்சத்திற்கு பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :– மேற்கண்ட பணிக்கான தொகையை வருவாய் நிதியில் செலவிடலாம்.**

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். இ5/6078/2019)**

**தீர்மானம் எண்: 1476 அனுமதி வழங்கப்பட்டது.**

**7.** உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7–கோத்தகிரி சாலையில் மதுவான சந்திப்பு அருகில் உள்ள மழைநீர் கால்வாய் பழுதடைந்துள்ளது. மழைநீர் அருகில் உள்ள சாலையில் சென்று ஆங்காங்கே தேங்கியுள்ளது. அதனால் சுற்றுச்சூழல் மாசுபடுவதுடன் பொதுமக்களுக்கு இடையூராக உள்ளது.

எனவே இதனை சரிசெய்ய Kebwall மற்றும் மழைநீர் தேங்கும் Sock Pit வகையில் அமைக்கவும் அவசியமானதாகும். இதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பிட்டு தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகின்றது. மேலும் இத்தொகையினை கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். இ5/6079/2019)**

**தீர்மானம் எண்: 1477 அனுமதி வழங்கப்பட்டது.**

**8.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.4 வண்டிச் சோலை பகுதியில் உள்ள கிருஷ்ணர் கோவில் அருகில் உள்ள நடைபாதையில் உள்ள மேன்ஹோல் மற்றும் பைப்லைன் பழுதடைந்து அருகில் உள்ள குடிநீர் கிணற்றில் சென்று குடிநீர் மாசுபடுகிறது. மேலும் நடைபாதையில் உள்ள மேன்ஹோல் முற்றிலும் பழுதடைந்து உள்ளதால் பொதுமக்கள் நடக்க முடியாமல் மிகவும் சிரம்மமாக உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள பாதாளச் சாக்கடை மேன்ஹோல் மற்றும் பைப்லைன் ஆகியவற்றை புதிதாக அமைப்பது மிகவும் அவசியம் ஆகும். இதற்காக

தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2.25/– இலட்சத்திற்கு பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :– மேற்கண்ட பணிக்கான தொகையை குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடை நிதியில் செலவிடலாம்.**

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். இ5/6080/2019)**

**தீர்மானம் எண்: 1478 அனுமதி வழங்கப்பட்டது.**

**9.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.31க்கு உட்பட்ட JSS Auto Stand மழையினால் அரிக்கப்பட்டு மிகவும் பழுதடைந்து உள்ளது. மேலும் சாலையின் நடுவே ஆங்காங்கே குழிகள் ஏற்பட்டு உள்ளது. இதனால் வாகனங்கள் செல்லும் போது போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. மேலும் சாலையில் உள்ள குழிகளால் இரவு நேரங்களில் பொதுமக்கள் செல்லும் போது கால் தடுமாறி கீழே விழுந்து காயம் ஏற்படும் நிலை உள்ளது. எனவே மேற்கண்ட இடங்களில் உள்ள குழிகளுக்கு கான்கிரிட் கொண்டு நிரப்பி பணி செய்து மிகவும் அவசியம் ஆகும். இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.90/– இலட்சத்திற்கு வருவாய் நிதியின் கீழ் பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :– மேற்கண்ட பணிக்கான தொகையை வருவாய் நிதியில் செலவிடலாம்.**

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். இ5/6081/2019)**

**தீர்மானம் எண்: 1479 அனுமதி வழங்கப்பட்டது.**

**10.** உதகை நகராட்சியின் முக்கிய சுற்றுலா சாலையின் ஒன்றான பழைய கார்டன் சாலையில் மழைநீர் கால்வாய் இல்லாமல் உள்ளது. இதனால், மழைக்காலங்களில் அதிக அளவில் மழைநீர் தேங்கி சுற்றுலா பயணிகள், பொது மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். மேலும், இது குறித்து மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் அறிவுரையின் படியும் இதனை சரி செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.7,00,000/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகின்றது. மேலும் இதனை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். இ5/6082/2019)**

**தீர்மானம் எண்: 1480 அனுமதி வழங்கப்பட்டது.**

**11.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.19–ல் ஸ்டேட் பேங்க் லைன், பிளவர் காட்டேஜ் பகுதிகளில் சுமார் 350–க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் மற்றும் பிரிக்ஸ் ஆங்கிலோ இந்தியன் பள்ளி, CSI CMM மேல்நிலைப் பள்ளி ஆகியவற்றின் கழிவு நீர் 100 ஆண்டுகளுக்கு

மேலாக தனியாருக்கு சொந்தமான இடத்தில் பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது தனியார் இடத்தில் கட்டிடங்கள் புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் மேற்கண்ட இடத்தில் கழிவுநீர் குழாய்கள் மற்றும் தொட்டிகள் மிகவும் பழுதடைந்துள்ளதாலும், தற்பொழுது மேற்கண்ட இடத்தில் கழிவுநீர் கால்வாய் மற்றும் தொட்டிகளை புதுப்பிக்க இடம் இல்லாத காரணத்தாலும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேராய்வின் போது சம்மர் ஹவுஸ் பகுதியில் கழிவுநீர் தொட்டி அமைத்து மேற்கண்ட வீடுகள் பள்ளிகளின் கழிவுநீரை தொட்டியில் சேகரித்து நகராட்சி கழிவுநீர் அகற்றும் வாகனம் மூலம் கழிவு நீரை அகற்றும்படி அறிவுறுத்தியதன் பேரில் மேற்கண்ட இடத்தில் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.24.90/– இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :– நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதி.**

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். இ5/6107/2019)**

**தீர்மானம் எண்: 1481 அனுமதி வழங்கப்பட்டது.**

**12.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.28 முள்ளிக் கொரையில் மூன்று நகராட்சிக் கழிப்பிடம் உள்ளது. இந்த கழிப்பிடத்தில் உள்ள கதவுகள், Closet, Manhole மற்றும் அதற்குண்டான Stone Ware PiPe ஆகியவை மிகவும் பழுதடைந்து உள்ளதால் அப்பகுதி பொதுமக்கள் இந்த கழிப்பறையை பயன்படுத்த முடியாமலும் மேலும் துார்நாற்றம் வீசுவதுடன் பொதுமக்களுக்கு நோய் தொற்றும் அபாயமும் உள்ளது. எனவே அப்பகுதி பொதுமக்கள் நலன் கருதி பழுதடைந்த இந்த கழிப்பிடத்தை சீரமைத்து தர வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். இதற்காக தயரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.00/– இலட்சத்திற்கு பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :– மேற்கண்ட பணிக்கான செலவுத் தொகை பாதாளச் சாக்கடை நிதியில் செலவிடலாம்.**

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். இ5/6185/2019)**

**தீர்மானம் எண்: 1482 அனுமதி வழங்கப்பட்டது.**

**13.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.30ல் உள்ள High Level சாலையில் அமைந்துள்ள நகராட்சியின் பாதாளச் சாக்கடை மற்றும் பைப்லைன் பழுதடைந்து உள்ளதால், இச்சாலையில் இருந்து வரும் கழிவு நீர் ரேசன் கடை முன்பு தேங்கியும், பிறகு வழிந்து சாலையின் கீழ் பகுதியில் உள்ள வனத்துறை குடியிருப்பிற்குள் செல்வதால் அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு துார்நாற்றம் வீசுவதுடன் நோய் தொற்றும் அபாயமும் ஏற்படும் நிலை உள்ளது. எனவே மேற்கண்ட சாலையில் உள்ள உடைந்த மேன்ஹோல் மற்றும் பைப்லைன் ஆகியவற்றை சரிசெய்து மிகவும் அவசியம் ஆகும். எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.70/– இலட்சத்திற்கு குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடை நிதியில் இருந்து பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :– மேற்கண்ட பணிக்கான தொகையை குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடை நிதியில் செலவிடலாம்.**

**அலுவலக குறிப்பு :–**

அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். இ5/6186/2019)

**தீர்மானம் எண்: 1483 அனுமதி வழங்கப்பட்டது.**

**14.** இந்நகராட்சிக்கு உட்பட்ட ஹிக்கின்ஸ் சாலை மழையினால் அரிக்கப்பட்டு மிகவும் பழுதடைந்து வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் நடந்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. மேலும் ரோஜா கார்டன் சந்திப்பில் இருந்து HMT சாலை வழியாக குன்னூர் செல்லும் சாலையுடன் இணையும் HMT சாலையானது 3 வது குடிநீர் திட்டத்தில் குழாய்கள் பதிக்க தோண்டப்பட்டு மிகவும் பழுதடைந்து குண்டும் குழியுமாக மாறியுள்ளது. இதனால் இருச்சக்கர வாகனங்கள் மற்றும் நடந்து செல்லும் பொது மக்களுக்கு மிகவும் சிரம்மமாக உள்ளது. இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதுடன் விபத்தும் ஏற்படும் நிலையும் உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள சாலையில் பழுதடைந்து உள்ள பகுதிகளுக்கு சிமெண்ட் கொண்டு சிமெண்ட் சாலையாக மாற்றி அமைக்க வேண்டியது மிகவும் அவசியம். இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பிட்டுத் தொகை ரூ.9.00/– இலட்சத்திற்கு பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :– மேற்கண்ட பணிக்கான தொகையை வருவாய் நிதியில் செலவிடலாம்.**

**அலுவலக குறிப்பு :–**

அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். இ5/6187/2019)

**தீர்மானம் எண்: 1484 அனுமதி வழங்கப்பட்டது.**

**15.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.3ல் உள்ள செல்வ விநாயகர் காலனியில் உள்ள பழைய கழிப்பிடம் ஆனது மிகவும் பழுதடைந்தும் இடிந்தும் உள்ளதால் இந்த கழிப்பிடத்தை பொதுமக்கள் பயன்படுத்த முடியாமல் உள்ளது. இதனால் அப்பகுதி பொதுமக்கள் நலன் கருதி பழைய கழிப்பிடத்தை முற்றிலும் இடித்து விட்டு அதன் அருகில் புதிய கழிப்பிடம் கட்டித்தர வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்புத் தொகை ரூ.8.00/– இலட்சத்திற்கு குடிநீர் வடிகால் நிதியின் கீழ் பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :– மேற்கண்ட பணிக்கான தொகையை குடிநீர் வடிகால் நிதியின் கீழ் செலவிடலாம்.**

**அலுவலக குறிப்பு :–**

அனுமதிவழங்கலாம்.
(ந.க.எண். இ5/6188/2019)

**தீர்மானம் எண்: 1485 அனுமதி வழங்கப்பட்டது.**

**16.** நகராட்சி எல்லைக்குட்பட்ட ஸ்டேட் பாங்க் காலனி பகுதியில் கடந்த நாட்களில் பெய்த பருவமழையில் மண்சரிவு ஏற்பட்டு சாலையில் வாகனங்கள் செல்வதற்கு பாதிப்பு ஏற்படுகிறது மற்றும் அவ்விடமானது மிகவும் பள்ளமாக இருப்பதால் வாகன ஆபத்துகள் ஏற்படுகிறது. எனவே இனி வரும் காலங்களில் பருவமழை தொடங்க உள்ளதால் மீண்டும் அதிகமான

மண்சரிவு ஏற்பட வாய்புள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி அப்பகுதியில் தடுப்பு சுவர் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9,00,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :—**

**அனுமதி வழங்கலாம்.**

**1. மேற்கண்ட பணியினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.**

**அதிகப்படியான மண் சரிவு ஏற்பட்டுள்ளதால் வாகனங்கள் செல்வது அபாயகரமாக உள்ளது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரலாம்.**

**(ந.க.எண். இ5/5290/2019)**

**தீர்மானம் எண்: 1486 அனுமதி வழங்கப்பட்டது.**

**17.** இந்நகராட்சியின் பொது நிதியின் கீழ் 07/03/2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1. | வெஸ்ட்பெரி சாலையில் உள்ள நகராட்சி நல அலுவலர் குடியிருப்பு மேம்பாடு செய்தல் | **2.75** |

| | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம், |
|---|---|---|
| 1. | திரு.K.E.கிருஷ்ணதாஸ், (—) 0.04 % குறைவு. | திரு.K.E.கிருஷ்ணதாஸ், (—) 0.04 % குறைவு. |
| 2 | திரு.S.நாகராஜ், (+) 2.13% அதிகம். | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :—**

**மன்றம் ஏற்கலாம்.**

**(ந.க.எண்.இ5/715/2019)**

**தீர்மானம் எண்: 1487 அனுமதி வழங்கப்பட்டது.**

**18.** இந்நகராட்சியின் முக்கிய மற்றும் மத்தியப் பகுதியில் அமைந்துள்ள நகராட்சியின் மணி கூண்டு (Clock Tower) பல ஆண்டுகளாக பழுதடைந்துள்ளது. இது குறித்து பொது மக்கள் பத்திரிகை செய்திகள் அதிக அளவில் புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. எனவே, முக்கிய சுற்றுலா தளமாக உள்ள நகரின் மணிகூண்டு (Clock Tower) சீரமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.1,85,000/– க்கு (LED Watch, UPS, Wiring) மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மேற்படி பணிகளை நகராட்சி பொது நிதிகளில் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மன்ற பொருள் வரைவு ஒப்புதலுக்கு.

**குறிப்பு :– பொது நிதி**

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். இ5/6251/2019)**

**தீர்மானம் எண்: 1488 அனுமதி வழங்கப்பட்டது.**

**19.** இந்நகராட்சியில் தினசரி சந்தையில் (B1 காவல் நிலையம் எதிரில்) சிமெண்ட் கான்கிரீட் சாலை மற்றும் பொதுக் கழிப்பிடம் கதவுகள் பழுதடைந்துள்ளது. இப்பகுதியில் தினசரி 100–க்கும் மேற்பட்ட லாரிகள் மூலம் காய்கறி தினசரி சந்தையில் இறக்கப்படுகிறது. மேற்கண்ட இடத்தில் கான்கிரீட் சாலைகள் பழுதடைந்துள்ளதால் வாகன ஓட்டுனர்கள் மற்றும் நகராட்சி சந்தையினுள் சேகரமாகும் குப்பைகளை எடுத்து வர துப்புரவு பணியாளர்களும் சிரமப்படுகிறார்கள். எனவே பழுதடைந்துள்ள கான்கிரீட் சாலையை பழுது நீக்கம் செய்து பொதுக் கழிப்பிடத்தின் கதவுகளை புதுப்பித்து வர்ணம் பூச தயாரிக்கப்பட்ட உத்தேச செலவினம் தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு பணிகளை நகராட்சி பொது நிதிகளில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :– பொது நிதி**

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். இ5/6252/2019)**

**தீர்மானம் எண்: 1489 அனுமதி வழங்கப்பட்டது.**

**20.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட LIC அலுவலகம் முதல் வென்லாக் சாலை வழியாக குறிஞ்சி ஹோட்டல் வரை சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2” 0 குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கப்பட்டுள்ளது. 2” 0 குடிநீர் குழாய் அமைப்பதற்காக குழி தோண்டப்பட்டு குழாய் பதிக்கப்பட்டதால் கான்கிரீட் Surface Drain பழுதடைந்துள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் கான்கிரீட் Surface Drain அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9.70 இலட்சத்திற்கு பணிகளை நகராட்சி பொது நிதிகளில் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :– பொது நிதி**

**அலுவலக குறிப்பு :—**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். இ5/6253/2019)**

**தீர்மானம் எண்: 1490 அனுமதி வழங்கப்பட்டது.**

**21.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18—ல் அரசு மருத்துவமனை மார்சுரி (Martury) – SP Office சாலையில் பழுதடைந்துள்ள குடிநீர் பகிர்மான குழாய்கள் சீரமைத்து புதிய 2” பகிர்மான குழாய்கள் பதிக்கும் பணிகள் மேற்கொள்ளும்போது கான்கிரீட் Surface drain மிகவும் பழுதடைந்துள்ளது. எனவே வாகனங்கள் பொது மக்கள், பள்ளி சிறுவர்கள் சாலையை கடக்க மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் பழுதடைந்துள்ள கான்கிரீட் Surface Drain புதுப்பிக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 1.65 இலட்சத்திற்கு பணிகளை நகராட்சி பொது நிதிகளின் கீழ் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :— பொது நிதி**

**அலுவலக குறிப்பு :—**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். இ5/6254 /2019)**

**தீர்மானம் எண்: 1491 அனுமதி வழங்கப்பட்டது.**

**22.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.27, அண்ணா காலனி பகுதியில் சுமார் 50 குடியிருப்புகள் உள்ளன. இப்பகுதியில் (4+4) எண்கள் கொண்ட கழிப்பிடம் உள்ளது. இக்கழிப்பிடத்தில் மின் இணைப்பு இல்லாத காரணத்தால் இரவு நேரங்களில் கழிப்பிடத்தை பொதுமக்கள் பயன்படுத்த மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே மேற்கண்ட கழிப்பிடத்திற்கு மின் இணைப்பு வழங்குவதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 60,000/—க்கு பணிகளை நகராட்சி பொது நிதிகளின் கீழ் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :— நகராட்சி பொது நிதி**

**அலுவலக குறிப்பு :—**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். இ5/6255 /2019)**

**தீர்மானம் எண்: 1492 அனுமதி வழங்கப்பட்டது.**

**23.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.33, நொண்டிமேடு, நேரு நகர் பகுதியில் சுமார் 50 குடியிருப்புகள் உள்ளன. இப்பகுதியில் 2” விட்டமுள்ள GI குடிநீர் பகிர்மான குழாய்கள் மிகவும் பழுதடைந்துள்ளதால் குடிநீர் பல இடங்களில் மிகவும் வீணாகிறது. மேலும் தற்பொழுது குடியிருப்புகளுக்கு புதிதாக குடிநீர் இணைப்புகள் வழங்க வேண்டியுள்ளதால் பொதுமக்கள்

நலன் கருதி பழுதடைந்துள்ள குடிநீர் குழாய்களை சீரமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.1.35 இலட்சத்திற்கு பணிகளை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதிகளில் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :– குடிநீர் மற்றும் வடிகால் நிதி**

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். இ5/6256 /2019)**

**தீர்மானம் எண்: 1493 அனுமதி வழங்கப்பட்டது.**

**24.** இந்நகராட்சிக்கு சொந்தமான உள்ளூர் நீர் தேக்கங்களை கீழ் கோடப்பமந்து, மேல் கோடப்பமந்து, கிளன்ராக், டைகர் ஹில், கீழ் தொட்ட பெட்டா, மேல் தொட்ட பெட்டா, மார்லிமந்து, பழைய உதகை, கோரி சோலா மற்றும் 5 தரைமட்ட நீர் தேக்கத் தொட்டிகளான மேரிஸ் ஹில், ஜெயில் ஹில், IDH டேங்க், BP டேங்க், Dunmere ஆகிய இடங்களில் தற்பொழுது Liquid Chlorination Plant பொருத்தப்பட்டு (Sodium Hypochlorite Solution மூலம் பொதுமக்களுக்க சுத்தமான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்பொழுது ஆகஸ்ட் 2019 முதல் பிப்ரவரி 2020 வரை சோடியம் Hypo Chlorite Solution வாங்குவதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.15.00 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :– குடிநீர் மற்றும் வடிகால் நிதி**

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். இ5/6257 /2019)**

**தீர்மானம் எண்: 1494 அனுமதி வழங்கப்பட்டது.**

**25.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.2ல் உள்ள பட்பயர் பகுதியில் உள்ள மழைநீர்க் கால்வாய் ஆனது மிகவும் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இதனால் மழைக் காலங்களில் மழைநீர் செல்ல முடியாமல் கால்வாயில் மழைநீர் தேக்கி அருகில் உள்ள வீடுகளுக்குள் சென்று விடுகிறது. இதனால் தூர்நாற்றம் வீசுவதுடன் நோய் தொற்றும் அபாயமும் உள்ளது. எனவே மேற்கண்ட பட்பயர் பகுதிகளில் உள்ள கால்வாயினை புதுப்பித்தும் சற்று உயர்த்தியும் பணி செய்ய வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.97/– இலட்சத்திற்கு பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :– மேற்கண்ட பணிக்கான தொகையை குடிநீர் வடிகால் நிதியில் பகுதியில் பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். இ5/6258 /2019)**

**தீர்மானம் எண்: 1495 அனுமதி வழங்கப்பட்டது.**

**26.** இந்நகராட்சியின் பொது நிதியின் கீழ் 24/07/2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1. | மிஷினரி ஹில் பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல். | **9.90** |

| | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம், |
|---|---|---|
| 1. | திரு.P.விஜயராகவன்,<br>(+) 0.60 % குறைவு. | திருவாளர். Global Environment System.<br>(–) 0.03% அதிகம். |
| 2 | திருவாளர். Global Environment System.<br>(–) 0.03% அதிகம். | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :–**

**மன்றம் ஏற்கலாம்.**

**(ந.க.எண்.E5/5329/2019)**

**தீர்மானம் எண்: 1496 ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

**27.** இந்நகராட்சியின் பொது நிதியின் கீழ் 14/06/2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1. | திட்டுக்கல் குப்பை கிடங்கில் செயின் டோசர் மூலம் சமன் செய்தல். | 5.00 |

| | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம், |
|---|---|---|
| 1. | திரு. D. தனபால்<br>(–) 1.54 % | திரு. D. தனபால்<br>(–) 1.54 % |
| 2 | திரு. சீனிவாசன்<br>(+) 13.85 % | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :–**

**மன்றம் ஏற்கலாம்.**

**(ந.க.எண்.H2/11923/2018)**

**தீர்மானம் எண்: 1497 ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

**28.** இந்நகராட்சியின் பொது நிதியின் கீழ் 24/07/2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1. | நொண்டிமேடு பகுதியில் பாதாள சாக்கடை சீரமைக்கும் பணி. | 4.50 |

| | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம், |
|---|---|---|
| 1. | திரு.T.சுப்ரமணியம்,<br>(–) 0.16 % குறைவு. | திரு.T.சுப்ரமணியம்,<br>(–) 0.16 % குறைவு. |

| | | |
|---|---|---|
| 2 | திருவாளர். M.K.ஆனந்த குமார்,<br>(+) 1.36% அதிகம். | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :–**

**மன்றம் ஏற்கலாம்.**

**(ந.க.எண்.E5/5292/2019)**

**தீர்மானம் எண்: 1498 ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

**29.** இந்நகராட்சியின் பொது நிதியின் கீழ் 24/07/2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1. | நகராட்சி குடியிருப்பு கதவு எண்.105 சிலேட்டர் ஹவுஸ் பழுது பார்க்கும் பணி. | 2.00 |

| | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம், |
|---|---|---|
| 1. | திரு.பி.விஜயராகவன்,<br>(+) 2.23 % அதிகம். | திருவாளர். Judas Electricals,<br>(–) 0.09% குறைவு. |
| 2 | திருவாளர். Judas Electricals,<br>(–) 0.09% குறைவு. | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :–**

**மன்றம் ஏற்கலாம்.**

**(ந.க.எண்.A9/4807/2019)**

**தீர்மானம் எண்: 1499 ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

**30.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.6 ஆரணி ஹவுஸ் பகுதியில் மற்றும் நேதாஜி நகர் ஆகிய இரண்டு பகுதிகளில் சுமார் 100 குடும்பங்கள் உள்ள இந்த குடும்பங்களுக்கு நகராட்சி மூலம் குடிநீர் வழங்க அப்பகுதி மக்களுக்கு 2" GI குழாய் அமைத்து அதன் மூலம் தண்ணீர் வழங்க வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட பகுதிகளுக்கு புதிதாக சுமார் 200 மீட்டர் 2" GI

குழாய் அமைப்பது மிகவும் அவசியம் ஆகும். இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 1.25/– இலட்சத்திற்கு பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :– மேற்கண்ட பணிக்கான தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளலாம்.**

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதிவழங்கலாம்.**

**(ந.க.எண். இ5/6287 /2019)**

**தீர்மானம் எண்: 1500 அனுமதி வழங்கப்பட்டது.**

**31.** இந்நகராட்சிக்கு உட்பட்ட ஆறு இடங்களில் உள்ள நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையத்திற்கும், ஒரு Dry Waste Collection மையத்திற்கும், ஏழு பொதுநல பிரிவு அலுவலங்கங்களுக்கும் மொத்தம் 14 இடங்களிலும் எடை அளவீட்டு கருவிகள் பொருத்த 09.07.2019 அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டு உள்ளது. எனவே மேற்கண்ட 14 இடங்களில் எடை அளவீட்டு கருவி பொருத்த வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். எனவே மேற்கண்ட 14 இடங்களில் எடை அளவீட்டு கருவி அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.6.00/– இலட்சத்திற்கு பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :– மேற்கண்ட பணிக்கான தொகையை வருவாய் நிதியில் இருந்து செலவிடலாம்.**

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். எச்2/5680 /2019)**

**தீர்மானம் எண்: 1501 அனுமதி வழங்கப்பட்டது.**

**32.** இந்நகராட்சியில் மொத்தம் 4900 எண்கள் தெரு விளக்குகள் உள்ளன. இவற்றில்

15 W LED – 2778 Nos
60 W LED – 856 Nos
High mast light – 21 Nos
200 W LED – 240 Nos
ADB Light – 1066 Nos
Others – 179 Nos

இவற்றில் 15 LED – 2778 எண்கள் Schnell நிறுவனம் மூலம் பராமரிப்பு பணிகள், உதிரி பாகங்கள் மாற்றுதல் போன்ற பணிகள் செய்து புதுப்பிக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள மின் விளக்குகள் நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றது. எனவே 2019–2020–ம் ஆண்டில் முதல் கட்டமாக பராமரிப்பு பணிகளுக்காக LED Drivers, Wires, Fuse Carrier lamps, Choke, Ignitor போன்ற உதிரி பாகங்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.11,50,000/–க்கு பணிகளை வருவாய் மற்றும் மூலதன நிதி மூலம் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :– வருவாய் மற்றும் மூலதன நிதி.**

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். இ4/6423 /2019)**

**தீர்மானம் எண்: 1502 அனுமதி வழங்கப்பட்டது.**

**33.** இந்நகராட்சியின் பொது நிதியின் கீழ் 24/07/2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1. | நகராட்சி சுதந்திர தின சதுக்கம் வர்ணம் பூசுதல் மற்றும் விழா ஏற்பாடுகள் செய்தல் | 0.50 |

| | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம், |
|---|---|---|
| 1. | திரு.S.R. ரவிக்குமார்<br>(+) 0.19 % அதிகம். | திரு. S,R. முரளிகுமார்,<br>(–) 0.48% குறைவு. |
| 2 | திரு. S,R. முரளிகுமார்,<br>(–) 0.48% குறைவு. | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :–**

**மன்றம் ஏற்கலாம்.**

**(ந.க.எண்.E5/5624/2019)**

**தீர்மானம் எண்: 1503 ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

**34.** உதகமண்டலம் நகராட்சியின் **30.67** ச.கி.மீ பரப்பளவிலும் **36** வார்டுகளுக்கும் Parsons Valley Head works–லிருந்து இத்திட்டங்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், நகரின் முக்கிய **6** தொட்டிகள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. மேலும் தெருவிளக்குகள் **4900** மின்விளக்குகள் உள்ளன. இதனை Switch on/off செய்ய முறையாக ஒழுங்குப்படுத்த “Central / Net” லிருந்து இனைத்து பணியாளர்களுக்கு உடனடியாக தெரியப்படுத்த Motorolo Mike அமைக்க வேண்டியுள்ளது.

இதனை கண்காணிக்கவும், Motorolo Walkie Takie அமைக்க ரூ.9,50,000/—க்கு தயார் செய்யப்பட்ட தொகைக்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது. மேலும் இத்தொகையினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் செலவிடவும் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :—**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.E5/6292/2019)**

**தீர்மானம் எண்: 1504 அனுமதி வழங்கப்பட்டது.**

**35.** இந்நகராட்சி அலுவலகத்தில் அனைத்து பிரிவு பணிகளும் கணிணிமயமாக்கப்பட்டு தற்சமயம் 60—க்கும் மேற்பட்ட கணிணிகள், பிரின்டர்கள், UPS — கள் மூலம் நகராட்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவைகள் அடிக்கடி பழுதடைவதுடன் கணிணிகள் Virus — களால் பாதிக்கப்படுகிறது. பழுதடைந்த கணிணிகள் சரி செய்ய இயலாமல் உள்ளது. எனவே பணிகள் தாமதமாவதுடன் பணிகள் பாதிக்கும் நிலை உள்ளது. எனவே இப்பணிகளை "AMC" (வருடாந்திர முழுவதும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச செலவினம் ரூ.5.00/— இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :— பொது நிதி.**

**அலுவலக குறிப்பு :—**

**அனுமதி அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண். இ5/6422 /2019)**

**தீர்மானம் எண்: 1505 அனுமதி வழங்கப்பட்டது.**

**36.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.36, மஞ்சனக்கொரை பகுதியில் அங்கன்வாடி கட்டிடத்தில் சமையல் அறையில் சுவர் பழுதடைந்துள்ளது. எனவே பள்ளி குழந்தைகள் நலன் கருதி பழுதடைந்துள்ள கட்டிடத்தை புதுப்பித்து சுவற்றிற்கு வர்ணம் பூசி மின் இணைப்புகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.90,000/— ஆகும். எனவே, மேற்கண்ட பணிகளை நகராட்சி கல்வி நிதிகளின் கீழ் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :— கல்வி நிதி.**

**அலுவலக குறிப்பு :—**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். இ5/6421 /2019)**

**தீர்மானம் எண்: 1506 அனுமதி வழங்கப்பட்டது.**

**37.** இந்நகராட்சிக்கு உட்பட்ட அரசு கலைக் கல்லூரி மைதானத்தில் எதிர்வரும் 15—08—2019 அன்று சுதந்திர தினவிழா மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெற உள்ளதால் இதில் பங்கேற்க வரும் பள்ளிக் குழந்தைகள் பொதுமக்கள் அரசு அலுவலர்கள் பார்வையாளர்களுக்கு தேவையான குடிநீர் வசதி தற்காலிக கழிப்பிடங்கள் ஏற்பாடு செய்ய வேண்டி உள்ளது. எனவே

இப்பணிகள் மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.40,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :— மேற்கண்ட பணிக்கான தொகையை வருவாய் நிதியில் செலவிடலாம்.**

**அலுவலக குறிப்பு :—**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். இ5/6420/2019)**

**தீர்மானம் எண்: 1507 அனுமதி வழங்கப்பட்டது.**

**38.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.2 குளிச்சோலை செல்லும் சாலையில் வி.சி.காலனி என்ற இடத்தில் காக்கா தோப்பு என்ற பகுதியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகப் பணிகள் நடைபெற்று வருவதால் இப்பணியானது முடியும் தருவாய் உள்ளது. எனவே இந்த ஒருங்கிணைந்த நீதி மன்ற வளாகத்திற்கு செல்லும் சாலையானது மிகவும் குறுகலாகவும் மழையினால் அரிக்கப்பட்டும் உள்ளது. எனவே மேற்கண்ட சாலையை செப்பனிடவும் மாவட்ட நீதிபதி உதகை அவர்களின் D.No: 2146/2019 Date : 19.07.2019 ன் படி கேட்டுக் கொள்ளப்பட்டு உள்ளது. இதன்படி மேற்கண்ட சாலையை ஆய்வு செய்ததில் மழையினால் பாதிக்கப்பட்ட இடத்தில் Paverblock கற்களும் மற்ற இடங்களில் தார் ஒட்டும் பணி செய்வது மிகவும் அவசியம் ஆகும். எனவே மேற்கண்ட சாலையில் Paverblock கற்கள் கொண்டு சாலையை புதுப்பிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**4.95/—** இலட்சத்திற்கு பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :— மேற்கண்ட பணிக்கான தொகையை வருவாய் நிதியின் மூலம் செலவிடலாம்.**

**அலுவலக குறிப்பு :—**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். இ5/6026/2019)**

**தீர்மானம் எண்: 1508 அனுமதி வழங்கப்பட்டது.**

**39.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.6ல் கோடப்பமந்து கால்வாய்யை ஒட்டியுள்ள வீடுகளில் இருந்து வரும் கழிவு நீர் கோடப்பமந்து கால்வாயில் சென்று கலக்கிறது. இதனால் உதகை ஏரி மாசு அடைகிறது. எனவே இதனை தடுக்கும் பொருட்டு கோடப்பமந்து கால்வாயில் செப்டிக் டேங் அமைத்து அதற்கு மேல் பகுதியில் உள்ள வீடுகளில் இருந்து வரும் கழிவு நீரை மேன் ஹோல் மற்றும் பைப்லைன் அமைத்து கோடப்பமந்து கால்வாயில் கட்டப்பட்டு உள்ள செப்டிக் டேங் உடன் இணைத்தால் தான் உதகை ஏரியில் கழிவு நீர் கலப்பதை தடுக்க முடியும் எனவே மேற்கண்ட கோடப்பமந்து கால்வாய்யை ஒட்டியுள்ள வீடுகளுக்கு அருகில் மேன்ஹோல் மற்றும் பைப்லைன் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**9.00/—** இலட்சத்திற்கு பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :— மேற்கண்ட பணிக்கான தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளலாம்.**

**அலுவலக குறிப்பு :—**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். இ5/6419/2019)**

**தீர்மானம் எண்: 1509 அனுமதி வழங்கப்பட்டது.**

**40.** இந்நகராட்சியில் நகரமைப்பு பிரிவில் அனுமதியற்ற கட்டுமானங்கள் தொடர்பான விதிமீறல் அறிக்கைகள் மற்றும் கட்டிட அனுமதி கோரி பெறப்படும் விண்ணப்பங்கள் மீதான நடவடிக்கைகள் தொடர்பான படிவங்களை நகல்கள் அதிக அளவில் தேவைப்படுவதால் ஜெராக்ஸ் நகல்கள் எடுக்க நகரமைப்பு பிரிவில் போதிய வசதி இல்லை, மேலும் அனுமதியற்ற கட்டுமானங்கள் தொடர்பான வழக்குகள் சம்மந்தமாக நீதிமன்றங்களுக்கு வாதுரை மற்றும் எதிர் வாதுரை நகல்கள் அடிக்கடி சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது. எனவே நகரமைப்பு பிரிவிற்கு தனியாக ஜெராக்ஸ் இயந்திரம் வாங்குவதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பிடு தொகை ரூ.1.35 இலட்சத்திற்கு இயந்திரம் வாங்குவதற்கு நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :– நகராட்சி பொது நிதி.**

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். இ5/5826/2019)**

**தீர்மானம் எண்: 1510 அனுமதி வழங்கப்பட்டது.**

**41.** அரசாணை நிலை எண்.84, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (இ.சி.உ) துறை நாள்.25.06.2018–ன் படி 01.01.2019 முதல் தமிழ்நாட்டில் ஒரு முறை பயன்படுத்தலுக்கு பின் தூக்கியெறியக் கூடிய பல்வேறு வகையான பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், நீலகிரி மாவட்டத்தின் சுற்றுச்சூழல் பாதிக்காமல் இருக்கவும், பொது சுகாதார கேடு ஏற்படுவதை முற்றிலுமாக தவிர்க்கவும், நீலகிரி மாவட்டத்திலுள்ள அனைத்து உள்ளாட்சி பகுதிகளிலும் 19 வகையான பிளாஸ்டிக் பொருட்களை உபயோகிக்கவும், விற்பனை செய்யவும் தடை செய்து, நீலகிரி மாவட்ட அரசிதழில் (அரசிதழ் எண்.2, நாள்.09.05.2018) அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்நிலையில், தடை செய்யப்பட்டுள்ள பிளாஸ்டிக் பொருட்களை தவிர பயன்பாட்டில் உள்ள இதர பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் பறிமுதல் செய்யப்படும் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளால் சேகரிக்கப்பட்டு வரும் நிலையில், அதனை சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்கா வண்ணம் உரிய முறையில் அழிப்பதற்கும், அதன் அதிக பட்ச பயன்களை பெறும் பொருட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வது அவசியமாகிறது. மேலும், பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதி 2016–ன் விதி 5, 6 மற்றும் 7–ல் தார் சாலை பணிகளில் மறுசுழற்சி செய்ய இயலாத பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்த உள்ளாட்சி அமைப்புகள் ஊக்குவிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை விதி 2016 (Plastic Waste Management Rules 2016)–ன் பிரிவு 5, 6 மற்றும் 7–ற் கிணங்க, மறுசுழற்சி செய்ய முடியாத பிளாஸ்டிக் கழிவுகளை உரிய முறையில் அழிப்பதற்கும், அதன் அதிகபட்ச பயன்களை பெறும் பொருட்டு, நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளில் பல்வேறு துறைகளின் கீழ் பல்வேறு திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படும் தார்சாலை பணிகளில் அரைக்கப்பட்ட பிளாஸ்டிக்கினை இந்திய அரசின் தேசிய ஊரக சாலைகள் மேம்பாட்டு முகமை, பரிந்துரைத்த 8 விழுக்காட்டுக்கு

மிகாமல் தாருடன் கலந்து பயன்படுத்திட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்ற மன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.4726/2017/எச்2)**

**தீர்மானம் எண்: 1511 அனுமதி வழங்கப்பட்டது.**

**42.** நீலகிரி மாவட்டம் ஒரு சுற்றுலா மாவட்டம் என்பதால் நீலகிரி மாவட்டத்தின் சுற்றுச்சூழலை மேலும் மேம்படுத்திட பல்வேறு வகையான நடவடிக்கைகள் உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து மாவட்ட நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் விளம்பர பலகைகள் / பேனர்கள் பதாகைகள் வைப்பது மற்றும் பொது இடங்களில் சுவரொட்டிகள் வைப்பது மற்றும் ஒட்டுவது தொடர்பாக பல்வேறு கட்டுப்பாடுகள் அரசால் விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், நீலகிரி மாவட்டத்தில் **1959** ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது இடங்கள் (சேதமேற்படுத்துவதை தடுத்தல்) சட்டம் The Tamilnadu Open Places (Prevention of Disfigurement) Act 1959, உயர்நீதிமன்ற உத்திரவுகள் மற்றும் அரசின் உத்தரவிற்கிணங்க தீவிரமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு தனியார் அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகள் பொது இடங்களிலும் தனியார் இடங்களிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு வருவது நீலகிரி மாவட்டத்தின் அழகினையும் சுற்றுச்சூழலையும் சீர் குலைப்பதாக உள்ளது. எனவே நீலகிரி மாவட்டத்தின் சுற்றுச்சூழலினை கருத்தில் கொண்டு உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளில் உள்ள பொது இடங்கள் இயற்கை வளங்கள் மற்றும் தனியாருக்கு சொந்தமான எந்த ஒரு இடத்திலும் எந்த ஒரு நபரும் / அமைப்பும் சுவரொட்டிகள் வைக்கவும் சுவரொட்டிகள் ஒட்டவும் தடை விதித்தும் மேலும் தடையை மீறி சுவரொட்டிகள் வைப்பவர் மற்றும் ஒட்டுபவர் மீது தமிழ்நாடு பொது இடங்கள் (சேதமேற்படுத்துவதை தடுத்தல்) சட்டம் **1959** ற்கிணங்க ரூ.**5000/–**ஐ அபராதமாக விதிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.6481/2019/எப்1)**

**தீர்மானம் எண்: 1512 அனுமதி வழங்கப்பட்டது.**

**43.** உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசுக்கு சொந்தமான புல எண்.F/1/41/1 காலையில் 10 சென்ட் இடம் தரிசு என வகைப்பாட்டினை கொண்டுள்ள இடத்தில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக நகராட்சியின் ஆட்சேபனையின்மை சான்று கோரப்பட்டுள்ளது. மேற்கண்ட இடமானது கிராம ஆவணங்களில் தரிசு என பதிவினை கொண்ட அரசு நிலமாகும். மேலும் மேற்கண்ட இடமானது உதகமண்டலம் முழுமைத்திட்டத்தில் பலதரப்பட்ட நில உபயோகப் (Multi Use Zone) பகுதியாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட இடத்தினை மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய மட்டும் ஆட்சேபனை ஏதும் இல்லை என சான்று வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**(ந.க.எண்.3140/2019/எப்2)**

**தீர்மானம் எண்: 1513 அனுமதி வழங்கப்பட்டது.**

**44.** இந்நகராட்சிக்கு சொந்தமான கட்டண கழிப்பிடங்கள் மற்றும் ஆடு, மாடு வதைக் கூடத்தை ஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளிகள் திருத்திய விகிதத்தில் கோர நகரமன்ற தீர்மான எண்.1470, நாள்:12.07.2019ல் அனுமதி அளிக்கப்பட்டது.

மேற்கண்ட தீர்மானத்தின் படி கீழ்கண்ட குததகை இனங்கள் 26.07.2019 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டது.

1. கார்டன் அருகில் உள்ள கட்டண கழிப்பிடம்
2. மார்க்கெட் தினசரி நுழைவு வாயில் அருகில் உள்ள கட்டண கழிப்பிடம்
3. அப்பர் பஜார் மார்க்கெட் சாலையில் உள்ள கட்டண கழிப்பிடம்(நம்ம டாய்லெட்)
4. உழவர் சந்தை அருகில் உள்ள கட்டண கழிப்பிடம் (நம்ம டாய்லட்)
5. சிலேட்டர் ஹவுஸ் ஆடு, மாடு வதை கூடம்.

வரிசை எண்.1முதல் 5வரை உள்ள குத்தகை இனத்திற்கு ஏலம் கோர யாரும் பங்கேற்கவில்லை.

வரிசை எண்.1–க்கு ஒப்புந்த புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை.

வரிசை எண்.2–க்கு (மார்க்கெட் தினசரி நுழைவு வாயில் அருகில் உள்ள கட்டண கழிப்பிடம்) கீழ்கண்டவாறு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றது.

1. திரு.N.தியாகராஜன், கேத்தி – ரூ.3,00,000/–
2. திரு.R.ரகு, புதுலைன், கேத்தி – ரூ.2,90,000/–

இதில் உயர்ந்த பட்ச ஒப்பந்த புள்ளி தொகை ரூ.3,00,000/–க்கு திரு.N.தியாகராஜன், கேத்தி அவர்கள் கோரியுள்ளார்.

வ.எண்.3–க்கு (அப்பர் பஜார், மார்க்கெட் சலையில் உள்ள கட்டண கழிப்பிடம் நம்ம டாய்லெட்) கீழ்கண்டவாறு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றது.

1. திரு.N.தியாகராஜன், கேத்தி – ரூ.60,000/–
2. திரு.R.ரகு, புதுலைன், கேத்தி – ரூ.58,000/–

இதில் உயர்ந்த பட்சம் ஒப்பந்த புள்ளி தொகை ரூ.60,000/–க்கு திரு.தியாகராஜன், கேத்தி அவர்கள் கோரியுள்ளார்.

வ.எண்.4 (உழவர் சந்தை அருகில் உள்ள கட்டண கழிப்பிடம் நம்ம டாய்லெட்)க்கு கீழ்கண்டவாறு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றது.

1. திரு.N.தியாகராஜன், கேத்தி – ரூ.50,000/–
2. திரு.R.ரகு, புதுலைன், கேத்தி – ரூ.49,500/–

இதில் உயர்ந்த பட்சம் ஒப்பந்த புள்ளி தொகை ரூ.50,000/–க்கு திரு.தியாகராஜன், கேத்தி அவர்கள் கோரியுள்ளார்.

வ.எண்.5 (ஆடு, மாடு வதைக் கூடம்) க்கு கீழ்கண்டவாறு ஒப்பந்தப் புள்ளி வரபெற்றது.

1. திரு.R.ரகு, புதுலைன், கேத்தி – ரூ.2,50,000/–
2. திரு.S.பஷீர், கேத்தி – ரூ. 2,45,000/–

இதில் உயர்ந்த பட்சம் ஒப்பந்த புள்ளி தொகை ரூ.2,50,000/–க்கு திரு.R.ரகு, புதுலைன், கேத்தி அவர்கள் கோரியுள்ளார்.

மேற்கண்ட குத்தகைகளில் ஒப்பந்தபுள்ளிகள் கோரிய இனங்களில் எற்கனவே ஏலம் விடப்பட்ட கடந்த ஆண்டு 2018–19 குத்தகை தொகை மற்றும் கடந்த 3 ஆண்டுகளின் சராசரி குத்தகை தொகையினை விட குறைவாக ஒப்பந்தபுள்ளியில் தொகை குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏலம் கோராத இனமான கார்டன் அருகில் உள்ள கட்டண கழிப்பிடத்தை மறு ஏலம் விடவும், மேலும் ஒப்பந்த புள்ளியில் கோரிய 2 முதல் 5 வரை உள்ள குத்தகை இனமான கட்டண கழிப்பிடம் மற்றும் ஆடு, மாடு வதைக் கூடம் (Slaughter House) போன்ற இனங்களை முடிவு செய்ய தனி அலுவலரின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு :–**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.911/2019/அ7)**

**தீர்மானம் எண்: 1514 மறு ஏலம் விட தீர்மாணிக்கப்பட்டது.**

**45.** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களின் குறிப்பின்படி உதகமண்டலம் நகராட்சி திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியாக அறிவிக்கப்பட்டு (ODF) தொடர்ந்து அத்தகைய நிலையை கடைப்பிடித்து வருகிறது. தற்போது அதன் அடுத்த நிலையான (ODF +) பெறுவதற்கு நகராட்சி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக இந்நகராட்சி பகுதியில் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையை பராமறிக்கப்பட்டுவருகிறது என்ற சுய உறுதிமொழி சான்றிதலுக்கு (Self Declaration) நகர் மன்ற அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகின்றது. மேலும் பொது மக்கள் தங்களின் ஆட்சேபணைகள் மற்றும் கருத்துக்களை ஆணையாளர் உதகமண்டலம் நகராட்சி அவர்களுக்கு எழுத்து வாயிலாக 15 தினங்களுக்குள் தெரிவிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.1 600/2017/எச்2)**

**தீர்மானம் எண்: 1515 அனுமதி வழங்கப்பட்டது.**

**46.** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் குறிப்பிற்கிணங்க உதகமண்டலம் நகராட்சி தூய்மை இந்திய திட்டம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மத்திய அரசின் Moud துறையினர் ஸ்டார் ரெட்சிங் ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கி வருகின்றர். அதன் ஒரு பகுதியாக உதகமண்டலம் நகராட்சியில் சேகரம் ஆகும் திடக்கழிவுகளை திட மேலாண்மை விதிகலின்படி முறையே தளம் பிரித்து கையாளப்பட்டுவருகின்றது. மேலும் Secondary Stage Trousportation செய்வது முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது. எனவே உதகமண்டலம் நகராட்சியினை குப்பை இல்லா நகராட்சி (Garbage Fier City) யாக, மூன்று நட்சத்திர அங்கிகாரம் (Three Star Rating) பெற சுய உறுதி மொழி (Self Declaration) பெற மன்ற அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும் தங்களின் ஆட்சேபனைகள் மற்றும் கருத்துக்களை ஆணையாளர் உதகமண்டலம் நகராட்சி அவர்களுக்கு எழுத்து வாயிலாக தெரிவிக்க வேண்டி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**(ந.க.எண்.1 601/2017/எச்2)**

**தீர்மானம் எண்: 1516 அனுமதி வழங்கப்பட்டது.**

**47.** பொது நலப்பிரிவில் பணியாற்றும் தனியார் மூலம் பணியாற்றும் துப்புறவு பணியாளர்களுக்கு (2019–2020) ஆண்டிற்கான பாதுகாப்பு உபகாரணங்கள் வாங்க மன்றம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மத்திய அரசு விதித்துள்ள G.S.T 18% விநியோகம் செய்யும் ஒப்பந்தருக்கு வழங்க வேண்டி உள்ளது. அதற்குண்டான தொகை ரூ.2,00,000/– (இரண்டு லட்சத்திற்கு) வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**(ந.க.எண்.267/2019/எச்2)**

**தீர்மானம் எண்: 1517 அனுமதி வழங்கப்பட்டது.**

**48.** பொது நலப்பிரிவு துப்புறவு பணியாளர்களுக்கு பணிக்கு தேவையான சுண்ணாம்புதூள், பிளிச்சிங் பவுடர், கிருமி நாசினி பொருட்கள் வாங்க மன்றத்தின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மத்திய அரசு விதித்துள்ள G.S.T 18% விநியோகம் செய்யும் ஒப்பந்தருக்கு வழங்க வேண்டி உள்ளது. அதற்குண்டான தொகை ரூ.2,00,000/– (இரண்டு லட்சத்திற்கு) வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**(ந.க.எண்.449/2019/எச்2)**

**தீர்மானம் எண்: 1518 அனுமதி வழங்கப்பட்டது.**

**49.** பொது நலப்பிரிவு **1** முதல் 7 பிரிவுகளுக்கு **(2019–2020)** ஆம் ஆண்டிற்கு தேவையான தளவாட பொருட்கள் வாங்க மன்றத்தின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மத்திய அரசு விதித்துள்ள G.S.T 18% விநியோகம் செய்யும் ஒப்பந்தருக்கு வழங்க வேண்டி உள்ளது.

அதற்குண்டான தொகை ரூ.2,00,000/– (இரண்டு லட்சத்திற்கு) வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.448/2019/எச்2)**

**தீர்மானம் எண்: 1519 அனுமதி வழங்கப்பட்டது.**

**50.** பொது நலப்பிளவில் பணியாற்றும் துப்புறவு பணியாளர்களுக்கு (2019–2020) ஆண்டிற்கான பாதுகாப்பு உபகரணங்கள் வாங்க மன்றம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மத்திய அரசு விதித்துள்ள G.S.T. 18% விநியோகம் செய்யும் ஒப்பந்தருக்கு வழங்க வேண்டி உள்ளது. அதற்குண்டான தொகை ரூ.2,00,000/– (இரண்டு லட்சத்திற்கு) வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.361/2019/எச்2)**

**தீர்மானம் எண்: 1520 அனுமதி வழங்கப்பட்டது.**

**51.** இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலைகளை மேம்படுத்த தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2019–20 ம் ஆண்டிற்கு ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு விரிவான திட்ட அறிக்கை கீழ்கண்டுள்ள பட்டியலின் படி நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களுக்கு அனுப்ப தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எ ண். | சாலையின் பெயர் | நீளம் (கி.மீ) | அகலம் (மீட்டர்) | மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்: 36, 32, 34–ல் மஞ்சனக்கொரை சாலை (பிஷப் டவுன் முதல் மாநில நெடுஞ்சாலை துறை சாலை சந்திப்பு வரை), எல்க்ஹில் கோயில் சாலை, டைகர் ஹில் சாலை (தலையாட்டிமந்து பள்ளி சாலை முதல் டைகர் ஹில் சாலை வரை) தார் சாலை மேம்படுத்தும் பணி | 3.250 | 4.20 | 1.984 |
| 2 | வார்டு எண்: 12,2,27,30,36,32–ல் M.S.Lane சாலை (மாரியம்மன் கோயில் முதல் காபி ஹவுஸ் சந்திப்பு வரை), ஆம்ஸ் அவுஸ் சாலை (ஆம்ஸ் அவுஸ் சாலை முதல் பி1 காவல் நிலையம் வரை), குருசடி காலனி சாலை (காந்தல் முக்கோணம் முதல் சர்ச் வரை), டன்மீர் பம்ப் ஹவுஸ் சாலை, லவ்டேல் சாலை (ஓபார்ட் சாலை முதல் பர்ன்ஹில் ஸ்டார்லிங் ஹோட்டல் வரை), எல்க்ஹில் சாலை (ரோஜா பூங்கா சாலை சந்திப்பு முதல் எல்க்ஹில் சாலை வரை) தார் சாலை மேம்படுத்தும் பணி | 3.700 | 4.50 | 1.976 |
| 3 | வார்டு எண்: 2,6,9, –ல் ஆரணி அவுஸ் சாலை, | 5.550 | 4.75 | 3.040 |

| | | | | |
|---|---|---|---|---|
| | குளிச்சோலை சாலை (பிங்கர் போஸ்ட் சந்திப்பு முதல் குளிச்சோலை வரை) ரோஜா பூங்கா சாலை (அலங்கார் தியேட்டர் சந்திப்பு முதல் எல்க்ஹில் சாலை சந்திப்பு வரை) தார் சாலை மேம்படுத்தும் பணி | | | |

அதன்படி மேற்கண்டவாறு ரூ.7.00 கோடி நிதியினை முழு மானித்துடன் **2019–20ம்** ஆண்டில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு (TURIP) திட்டத்தில் இருந்து பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** ரூ.7.00 கோடி நிதியினை முழு மானித்துடன் **2019–20ம்** ஆண்டில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு (TURIP) திட்டத்தில் இருந்து பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.இ5/6873/2019)**

**தீர்மானம் எண்: 1521 அனுமதி வழங்கப்பட்டது.**

**52.** நகராட்சி உரக்கிடங்கில் உள்ள **121** Dumper Placer Bin குப்பை தொட்டிகள் மிகவும் பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ளது. மேலும் வரும் காலங்களில் இக்குப்பை தொட்டிகள் அனைத்தும் மக்கும் நிலை உருவாகி முழுவதும் பயனற்று போகும் நிலையில் உள்ளது. எனவே மேற்படி குப்பை தொட்டிகளை ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி மக்கும் நிலையில் உள்ள **121** குப்பை தொட்டிகளை ஏலம் விட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.5434/2019/இ5)**

**தீர்மானம் எண்: 1522 அனுமதி வழங்கப்பட்டது.**

**53.** பொது நலப்பிரிவில் இயங்கி வரும் TN43D6006 வாகனத்திற்கு பழுது பணிகள் நிவர்த்தி செய்ய விண்ணப்பம் அளித்துள்ளார். மேலும் பழுது பணிகள் மேற் கொள்ளப்பட வேண்டியுள்ளதால். அதற்காகும் உத்தேச செலவினம் தொகை ரூ.**2,59,965/–** (இரண்டு லட்சத்தி ஐம்பத்தி ஒன்பதாயிரத்தி தொல்லாயிரத்தி ஆறுபத்தி ஐந்து ரூபாயை) வருவாய் மற்றும் மூலநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.4613/2019/எச்2)**

**தீர்மானம் எண்: 1520 அனுமதி வழங்கப்பட்டது.**

54. உதகமண்டலம் நகராட்சியில் பொது நலப்பிரிவில் ஓட்டுநர்களாக பணிபுரிந்து வந்த திரு.மனோகரன், ஓட்டுநர் மற்றும் திரு.பாலசுப்பிரமணி, ஓட்டுநர் ஆகியோர்கள் வயது முதிர்வு காரணமாக **30–06–2019** அன்று ஓய்வு பெற்றுள்ளதால் அவ்விரண்டு பணியிடங்கள் **01–07–2019** முதல் காலியாக உள்ளது. இதனால் நகராட்சி பகுதிகளில் குப்பைகள் அகற்றுதல்

போன்ற அன்றாட இன்றியமையாத பணிகள் பாதிக்கப்படுகின்றன. எனவே மேற்கண்ட காலியாக உள்ள ஓட்டுநர் பணியிடங்களை தகுதியுள்ள துப்புரவு பணியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்களை கொண்டு பதவி உயர்வு மூலம் நிரப்ப சுற்றறிக்கை அனுப்பப்பட்டதில் பொது நலப்பிரிவில் திரு.சி.மரியசூசை, துப்புரவு பணியாளர் ஒருவர் மட்டும் விருப்ப கடிதம் கொடுத்துள்ளார். ஆனால் அன்னார் மேற்படி பணியிடத்திற்கான கல்வித்தகுதி பெற்றிருக்கவில்லை. இதர நபர்கள் யாரும் மேற்படி பணியிடத்திற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை என நகராட்சி பொறியாளர் மற்றும் நகர் நல அலுவலரால் அறிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளது.

எனவே காலியாக உள்ள இரண்டு ஓட்டுநர் பணியிடங்களை நேரடி நியமன முறையில் நியமனம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற வேண்டி கருத்துருவினை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.5827/2019/சி1)**

**தீர்மானம் எண்: 1524 அனுமதி வழங்கப்பட்டது.**

**55.** இந்நகராட்சிக்கு உட்பட்ட காந்தல் பகுதியில் உள்ள கழிவு நீரேற்றும் நிலையத்தில் IUDM திட்டம் மூலம் கட்டப்பட்ட Bio Methanation Plant தினமும் 5 டன் மக்கும் குப்பையில் இருந்து Gas உற்பத்தி செய்யப்பட்டு அதன் மூலம் கழிவு நீரேற்று நிலையத்தில் உள்ள இரணடு 20 HP மோட்டர் இயக்க திட்டமிடப்பட்டு பணி முடிக்கப்பட்டு உள்ளது. இதில் தற்சமயம் Sludge tank ல் உள்ள 2HP மோட்டார் பழுதடைந்து உள்ளது. இதனால் மாட்டு சானம் மற்றும் Sludge களை Digestor tank கிற்கு Pump செய்ய முடிய வில்லை. மேலும் இங்கு வரும் குப்பைகளை அறைக்க போதுமான அளவு தண்ணீர் இல்லாமலும் Digestor tank ல் உள்ள சில பழுதுகளால் Gas உற்பத்தி ஆகாமல் உள்ளது. எனவே மேற்கண்ட பழுதுகளை சரி செய்ய 2 HP 2 எண்கள் Standty. 2HP – Rewinding motor, கிணறு மற்றும் Sintex tank, Digester Leakage Orresting மற்றும் கதவுகள் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீட்டுத் தொகை ரூ.4.85/– இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

குறிப்பு:– மேற்கண்ட பணிக்கான செலவுத் தொகை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு :–**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.6871/2019/இ5)**

**தீர்மானம் எண்: 1525 அனுமதி வழங்கப்பட்டது.**

**56.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட காந்தல் திருவள்ளுவர் தெரு விநாயகர் கோயில் அருகில் கழிவுநீர் குழாய் மற்றும் தொட்டிகள் மிகவும் பழுதடைந்துள்ளதால் கழிவுநீர் விநாயகர் கோவில் உள் பகுதியில் வருகிறது. மேலும் ரோகினி தியேட்டர் பின்புறத்தில் உள்ள வீடுகள்

மிகவும் தாழ்வான பகுதியில் உள்ளது. மேற்கண்ட இடத்தில் உள்ள கழிவுநீர் தொட்டிகள் மற்றும் குழாய்கள், மழைநீர் கால்வாய் மிகவும் பழுதடைந்துள்ள காரணத்தால் மேல் பகுதிகளிலிருந்து வரும் அதிக அளவிலான மழைநீர் கழிவுநீருடன் சேர்ந்து வீடுகளுக்குள் புகுந்து விடுகிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி பழுதடைந்துள்ள பாதாள சாக்கடை தொட்டிகள் மற்றும் குழாய்களை புதுப்பிக்கவும் மழைநீர் வெளியே செல்ல ஏதுவாக கல்வர்ட்டும் அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.4,95,000/–க்கு பணிகளை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதிகளில் பணி மேற்கொள்ள நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு :– குடிநீர் மற்றும் வடிகால் நிதி.**

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். இ5/6679/2019)**

**தீர்மானம் எண்: 1526 அனுமதி வழங்கப்பட்டது.**

**57.** உதகமண்டலம் நகராட்சி 30.67 சதுர கி.மீட்டர் பரப்பளவில் உள்ளது. நகரின் மக்கள் தொகை (2011) ன் படி 88422 ஆகும். மேலும் இத்திட்டம் அரசாணை எண்.422 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் வாரியம் துறை நாள்.19–10–2005–ல் பாதாள சாக்கடை திட்டத்திற்கு ரூ.572.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட்டு 30–11–2009 பணி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ளது. மேற்படி பணி முடிக்கப்பட்டு 10 ஆண்டுகள் ஆகியுள்ள நிலையில் பிரதான குழாய்கள் மற்றும் தொட்டிகள் பழுதடைந்துள்ளதால் கழிவுநீர் கோடப்பமந்து கால்வாயில் சென்று உதகை ஏரி மாசுபட வாய்ப்புள்ளது. எனவே உதகை ஏரி மாசுபடுவதை தவிர்க்கும் பொருட்டு கோடப்பமந்து கால்வாயில் உழவர் சந்தை பாலம் முதல் தென்றல் ஹோட்டல் வரை பழுதடைந்துள்ள பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் தொட்டிகள் அமைக்கவும் மற்றும் தலையாட்டிமந்து, பழை உதகை, கெல்சோ லைன், சர்ச்ஹில், செயின்ட் மேரீஸ் ஹில் பகுதி மற்றும் பீட்ன்ஸ் சாலை பகுதியில் பழுதடைந்துள்ள பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் தொட்டிகள் சீரமைக்கும் பணி மிகவும் அவசியமாகவுள்ளதால் மேற்படி பணி மேற்கொள்ள IUDM அல்லது CGF திட்டம் 2019–20 ம் ஆண்டிற்கு ரூ.500.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு விரிவான திட்ட அறிக்கை கீழ்கண்டுள்ள பட்டியலின் படி நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களுக்கு அனுப்ப தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியின் பெயர் | நீளம் (மீ) | தொட்டிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | உதகமண்டலம் ஏரி மாசுபடுவதை தவிர்ப்பதற்காக கோடப்பமந்து கால்வாய் உழவர் சந்தை பாலம் முதுல் தென்றல் ஹோட்டல் வரை | 4500 | 280 | 500.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | பழுதடைந்துள்ள பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் தொட்டிகள் மாற்றி அமைக்கும் மற்றும் தலையாட்டிமந்து, பழைய உதகை, கெல்சோ லைன், சர்ச்ஹில், 'செயின்ட் மேரீஸ் ஹில், அவலாஞ்சி சாலை, மற்றும் சம்மர் ஹவுஸ் ஆகிய இடங்களில் பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் தொட்டிகள் அமைக்கு பணி. | | | |
| | **மொத்தம்** | **4500** | **280** | **500.00** |

அதன்படி மேற்கண்டவாறு ரூ.500.00 இலட்சம் நிதியினை முழு மானித்துடன் 2019–20ம் ஆண்டில் IUDM அல்லது CGF திட்டத்தில் இருந்து பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :– ரூ.500.00 இலட்சம் நிதியினை முழு மானித்துடன் 2019–20 ஆண்டில் IUDM அல்லது CGF திட்டத்தில் இருந்து பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண். இ5/4735/2019)**

**தீர்மானம் எண்: 1527 அனுமதி வழங்கப்பட்டது.**

**58.** உதகமண்டலம் நகராட்சி 30.67 சதுர கி.மீட்டர் பரப்பளவில் உள்ளது. நகரின் மக்கள் தொகை (2011)–ன் படி 88422 ஆகும். மேலும் இந்நகராட்சியில் 36 வார்டுகள் உள்ளன. நகரில் தினமும் நாள் ஒன்றுக்கு சுமார் 36டன் குப்பைகள் தினமும் சேகரமாகிறது. இதில் 22 டன் மக்கும் குப்பை, 14–டன் மக்காத குப்பைகள் ஆகும். தீட்டுக்கல் உரக்கிடங்களில் 1940–ம் ஆண்டு முதல் குப்பைகள் கொட்டப்பட்டு வருகீறது. இதனை சரிசெய்ய National Green Tribunal – பசுமை தீர்ப்பாயத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது.

கடந்த 08–08–2019 அன்று பசுமை தீர்ப்பாயத்தின் நீதிபதிகள், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரக நிர்வாக இணை இயக்குநர், சென்னை ஆகியோர் நேரடி ஆய்வுகள் மேற்கொண்டு தற்பொழுதுள்ள நிலத்தில் பரவியிருக்கும் திடக்கழிவுகளை Bio-Mining மூலம் சீரமைக்க அறிவுறுத்தியுள்ளனர். மேற்படி பணி மேற்கொள்ள IUDM அல்லது CGF திட்டம் 2019–20 ம் ஆண்டிற்கு ரூ.856.76 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு விரிவான திட்ட அறிக்கை கீழ்கண்ட பட்டியலின் படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்ப தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.(இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தீட்டுக்கல் உரக்கிடங்களில் உள்ள குப்பைகளை Bio-Mining மூலமாக பிரித்து எடுத்தல் மற்றும் நிலம் சரி செய்யும் பணி. | 856.76 |

அதன்படி மேற்கண்டவாறு ரூ.856.76 இலட்சம் நிதியினை முழு மானியத்துடன் 2019–202ம் ஆண்டில் IUDM அல்லது CGF திட்டத்தில் இருந்து பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :– ரூ.856.76 இலட்சம் நிதியினை முழு மானியத்துடன் 2019–20 ம் ஆண்டில் IUDM அல்லது CGF திட்டத்தில் இருந்து பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண். இ4/4736/2019)**

**தீர்மானம் எண்: 1528 அனுமதி வழங்கப்பட்டது.**

**59.** தமிழக அரசின் உத்தரவின்படி இந்நகராட்சி பகுதிகளில் உள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்கு மானியமாக ரூபாய் 2000 வழங்க உத்திரவிட்டதற்கிணங்க 8517 பயனீட்டாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். மேற்பட்டவர்களுக்கு மானியத் தொகையினை வழங்கும் பொருட்டு அவர்கள் தொடர்பான சேகரிக்கப்பட்டுள்ள தகவல்களை 17034 பிரிண்ட் (துலா இரண்டு பக்கம்) ஜெராக்ஸ் நகல்கள் எடுக்கவும் அதனை கணினியில் பதிவேற்றம் செய்யவும் அதற்கு ஆகும் உத்தேச தொகை ரூ.70,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண். எப்2/963/2019)**

**தீர்மானம் எண்: 1529 அனுமதி வழங்கப்பட்டது.**

**60.** இந்நகராட்சிக்கு சொந்தமான எட்டின்ஸ் சாலை பகுதியிலுள்ள புல எண்.D/1/13 கொண்ட இடத்தில் பொதுமக்களால் அவ்வப்போது ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு வருகிறது. அப்பகுதியிலுள்ள ஆக்கிரமிப்புகளை நகராட்சி பணியாளர்களை கொ்ண்டு அவ்வபோது அகற்றப்பட்டு வருகிறது. மேலும் நகராட்சியின் நிதி நிலைமையை பெருக்கும் பொருட்டும், மீண்டும் பொதுமக்கள் ஆக்கிரமிப்பு செய்வதை தவிர்க்கும் பொருட்டும், மேற்கண்ட இடத்தில் 3 கடைகள் கட்டி அரசாணை எண்.92ன் படி ஏலம் விட்டு வருமானத்தை பெருக்குவதற்கு, அதற்கு ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.15.00 இலட்சத்திற்கு பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ5/6518/2019)

தீர்மானம் எண்: 1530 அனுமதி வழங்கப்பட்டது.

தனி அலுவலர்,
உதகமண்டலம் நகராட்சி.